**பாடம் - 7**
**லாயிலாஹ இல்லல்லாஹ்வின் நிபந்தனைகள் (தொடர்ச்சி)**

**الدرس السابع**
**تابع شروط لا إله إلا الله**

**4.**கட்டுப்படுதல்: ஏகத்துவக் கலிமா எதை அறிவிக்கின்றதோ அதற்குக் கட்டுப்பட வேண்டும். ஏற்றுக் கொள்வதற்கும் கட்டுப்படுவதற்குமுள்ள வித்தியாசம் என்னவெனில் ஏற்றுக் கொள்வதென்பது அதற்குரிய சரியான பொருளை வார்த்தையால் வெளிப்படுத்துவது. கட்டுப்படுதலென்பது செயல்களால் பின்பற்றுவதாகும்.
ஒருவன் லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருளை அறிந்து, அதை உறுதி கொண்டு அதை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறான் எனினும் அவன் அதற்கு கட்டுப்படவில்லை எனில் அவன் அறிந்ததற்கேற்ப செயல்படவில்லையெனில் அது அவனுக்கு பலன் அளிக்காது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَأَنِيبُوا إِلَى رَبِّكُمْ وَأَسْلِمُوا لَهُ ﴾ ﴿الزمر:٥٤﴾

உங்கள் இறைவன் பால் திரும்பி அவனுக்கே கட்டுப்படுங்கள். (39:54)

﴿ فَلا وَرَبِّكَ لا يُؤْمِنُونَ حَتَّى يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لا يَجِدُوا فِي أَنْفُسِهِمْ حَرَجًا مِمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا ﴾ ﴿النساء:٦٥﴾

உம் இறைவன் மீது சத்தியமாக! அவர்கள் தங்கள் இடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக ஏற்று பின்னர் நீர் தீர்ப்புச் செய்தது பற்றி தமக்குள் எந்த அதிருப்தியும் கொள்ளாமல் அதற்கு முழுமையாகக் கட்டுப்படாதவரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள். (4:65)

**5.**உண்மை: அல்லாஹ்விடம் உண்மையாக நடந்து கொள்ளுதல். இது அவனுடைய நம்பிக்கையில், அடிப்படைக்கொள்கையில் உண்மையாளனாக இருப்பதைக் குறிக்கும்.

﴿ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ وَكُونُوا مَعَ الصَّادِقِينَ ﴾ ﴿التوبة:١١٩﴾

அல்லாஹ் கூறுகிறான்: நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். நீங்கள் உண்மையாளர் களுடன் இருங்கள். (9:119)

قال ﷺ: (( من شهد أن لا إله إلا الله صادقًا بها دخل الجنة )) ﴿رواه أحمد ، وصححه الألباني﴾

உண்மையான உள்ளத்துடன் லாஇலாஹ இல்லல் லாஹ் எனக் கூறியவர் சொர்க்கம் புகுவார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்-18772)
ஒருவன் இக்கலிமாவை நாவால் சொல்லிக் கொண்டு அதன் அர்த்தத்தை உள்ளத்தால் மறுத்தால் நிச்சயமாக அது அவனுக்கு ஈடேற்றமளிக்காது. மாறாக அவன் நயவஞ்சகர்களின் கூட்டத்தில் சேர்ந்து விடுவான்.

நபி(ஸல்)அவர்கள் கொண்டு வந்த செய்திகள், அறிவுரைகள் அனைத்தையும் பொய்ப்படுத்துவதோ அல்லது அதில் சிலவற்றைப் பொய்ப்படுத்துவதோ உண்மையாக நடந்து கொள்வதற்கு முரணானதாகும். ஏனெனில் அல்லாஹ் நபி(ஸல்)அவர்களுக்கு கட்டுப்படவும் அவர்களை உண்மைப்படுத்தவும் ஏவியுள்ளான். நபிக்குக் கட்டுப்படுவதை தனக்குக் கட்டுப்படுதலோடு சேர்த்துக் கூறியிருக்கின்றான்.

﴿ قُلْ أَطِيعُوا اللهَ وَأَطِيعُوا الرَّسُولَ ﴾ ﴿النور:٥٤﴾

அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள்(அவன்) தூதருக்கும் கட்டுப்படுங்கள் என (நபியே!) நீர் கூறுவீராக. (24:54)